திரு.சா.மார்ஸ், எம்.எஸ்சி.,எம்.எட்., எம்.பில்.,
முதன்மைக் கல்வி அலுவலர்.

விழுப்புரம்,
நாள் 29.04.2015

# பாராட்டுச் சான்று

விழுப்புரம் வருவாய் மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்பதால் 2012–13, 2013–14 மற்றும் 2014–2015 – ம் ஆண்டுகளில் பின்தங்கிய மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்த 50 சதவீதத்திற்கும் குறைவாக தேர்ச்சி பெற்ற பள்ளிகளை தேர்ந்தெடுத்து அதில் காலியாக உள்ள முதுகலை ஆசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர்களை பள்ளிக் கல்வித் துறையோடு இணைந்து J.K.பவுண்டேஷன் சார்பாக பணியிடங்களை நிரப்பி விழுப்புரம் மாவட்டத்தின் தேர்ச்சி சதவீதத்தினை பல மடங்கு உயர்த்த உதவி செய்த திருமதி.காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கு நிர்வாகத்தின் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜே.கே. பவுண்டேஷன் மூலம் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கை**

| ஆண்டு | பட்டதாரி ஆசிரியர் | முதுகலை ஆசிரியர் |
|---|---|---|
| 2012–2013 | 31 | 48 |
| 2013–2014 | 72 | 40 |
| 2014–2015 | 0 | 163 |

மேலும் அனைத்து அரசுப் பள்ளிகளில் 10 மற்றும் 12 – ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு தேர்வில் வெற்றி பெற அனைத்துப் பாடங்களுக்கும் வினா–விடை புத்தகம் ஒரு இலட்சம் பிரதிகள் ஜே.கே.பவுண்டேஷன் மூலம் வழங்கப்பட்டது.

**J.K. பவுண்டேஷன் மூலம் செலவு செய்யப்பட்ட மொத்த தொகை –**

| ஆண்டு | ரூபாய் |
|---|---|
| 2012–2013 | 75,00,000.00 |
| 2013–2014 | 1,10,02,578.00 |
| 2014–2015 | 1,18,10,000.00 |

மேலும், மாணவர்கள் தேர்வை தன்னம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் வெற்றி பெற உளவியல் நிபுணர்களைக் கொண்டு சிறப்பான வகையில் பயிற்சி அளித்தார்கள். அதன் வாயிலாக அரசுப் பள்ளி மாணவ–மாணவிகளின் உயர்ந்த தேர்ச்சியை அடைந்துள்ளார்கள்.

| ஆண்டு | 10–ம் வகுப்பு | 12–ம் வகுப்பு |
|---|---|---|
| 2011–2012 தேர்ச்சி சதவீதம் | 80% | 77.73% |
| 2012–2013 தேர்ச்சி சதவீதம் | 81.99% | 78.03% |
| 2013–2014 தேர்ச்சி சதவீதம் | 82.66% | 85.18% |

மேலும் இந்த முன்னேற்றம் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஏழை / எளிய மாணவ / மாணவிகளின் கல்வித் தரம் உயர பேருதவியாக இருந்த ஜே.கே.பவுண்டேஷன் நிறுவனர் திருமதி.காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக தங்களது பணி மேலும் தொடர்ந்து செயல்பட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் அளப்பரிய மகிழ்வை அடைகிறோம். விழுப்புரம் மாவட்டத்தை தேர்வு செய்து கல்விப் பணியாற்றி வரும் ஜே.கே.பவுண்டேஷன் நிறுவனர் திருமதி.காமாட்சி ஜெயகிருஷ்ணன் அவர்களின் கல்வித் தொண்டு, சமூகப் பணிகளில் ஆர்வம், ஏழைக் குழந்தைகளின் மேல் அவர்களின் கரிசனமான அர்ப்பணிப்பு ஆகியவற்றை பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

மேன்மேலும் அவர்களின் சமூக பங்களிப்பு தொடர எங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2015 – 2016 – ம் கல்வி ஆண்டிலும் பள்ளிக் கல்வித் துறையோடு இணைந்து விழுப்புரம் மாவட்டத்தில் பள்ளிகளின் தேர்ச்சி சதவீதத்தை உயர்த்த தங்களது மேலான உதவியினை நல்குமாறு மிகுந்த அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

28.4.15

முதன்மைக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்

திருமதி.காமாட்சி ஜெயகிருஷ்ணன்,
ஜே.கே.பவுண்டேஷன்,
19, வெள்ளையன் ரோடு,
கோட்டூர்புரம், சென்னை–85.